# கோவிட்-19 தடுப்பூசிகள்: தெரிந்து கொள்ள வேண்டியவை

| நான் எங்கே தடுப்பூசி பெறலாம்? | எவ்வாறு சந்திப்பைத் திட்டமிடுவது? |
|---|---|
| உங்கள் சுகாதார வழங்குநர் | உங்கள் வழங்குநரை அழையுங்கள் அல்லது சந்திப்பை ஆன்லைனில் திட்டமிடுங்கள் |
| சமூக சுகாதார சிகிச்சையகங்கள் | எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்: vaccinelocator.doh.wa.gov/<br><br>அல்லது 1-800-525-0127 என்ற எண்ணிற்கு அழையுங்கள், பின்னர் # ஐ அழுத்துங்கள்.<br>மொழி உதவி கிடைக்கிறது. |
| உள்ளூர் மருந்தகங்கள் | |
| புதிய மருத்துவமனைகள் அல்லது நடமாடும் சிகிச்சையகங்கள் | அது மாறுபடுகிறது. சிகிச்சையகம் பற்றி நண்பர் அல்லது சமூக உறுப்பினர், அல்லது சமூக ஊடகங்களின் மூலம் நீங்கள் கேள்விபடக்கூடும். எவ்வாறு பதிவு செய்வது என்பது பற்றி அவர்களிடம் கேளுங்கள். |

## எனது தடுப்பூசி சந்திப்பைத் திட்டமிடுவதற்கு நான் என்ன கொண்டு வர வேண்டும்?

பின்வரும் ஆவணங்களும் கேட்கப்படலாம், ஆனால் நீங்கள் அவற்றை கொடுக்க வேண்டியதில்லை
:

- அடையாளத்திற்கான ஆவணம்
- காப்பீட்டு அட்டை
- சமூக பாதுகாப்பு எண்

தடுப்பூசி பெற நீங்கள் யு.எஸ். குடிமகனாக இருக்க தேவையில்லை. அவர்கள் உங்கள் குடியேற்ற நிலை குறித்து கேட்க மாட்டார்கள்.

தனிப்பட்ட தரவுகள் பொது சுகாதார நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும்.

## தடுப்பூசிக்கு எவ்வளவு செலவாகும்?

தடுப்பூசிக்கு நீங்கள் கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. உங்களிடம் கட்டணம் வசூலிக்கக்கூடாது அல்லது ரசீது பெறக்கூடாது.

## எனக்கு இரண்டாவது முறை தடுப்பூசி செலுத்த வேண்டுமா?

சில தடுப்பூசிகள் 2-3 டோஸ்கள் செலுத்தப்பட வேண்டும். முழுமையான பாதுகாப்பை பெறுவதற்கு தடுப்பூசி போடப்பட்ட பிறகு சுமார் இரண்டு வாரங்கள் ஆகும். சிலருக்கு 1-2 பூஸ்டர் டோஸ்கள் தேவைப்படலாம்.

மேலும் தகவல்களுக்கு, கோவிட்-19 தடுப்பூசி பூஸ்டர் டோஸ்கள் என்ற இணைப்பைப் பார்வையிடவும்.

| | |
|---|---|
| **Pfizer-BioNTech** | 6 மாதங்கள் – 4 வயதுடையவர்கள்: 3 டோஸ்கள், 1 ஆவது டோஸுக்குப் பிறகு 21 நாட்கள், 2 ஆவது டோஸுக்குப் பிறகு 56 நாட்கள்<br>5 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள்: 2 டோஸ்கள், 21 நாட்கள் இடைவெளி |
| **Moderna** | 6 மாதங்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள்: 2 டோஸ்கள், 21 நாட்கள் இடைவெளி |
| **Novavax** | 12 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள்: 2 டோஸ்கள், 21 நாட்கள் இடைவெளி |
| **Johnson & Johnson** | 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள்: 1 டோஸ் |

### மேலும் தகவல்களுக்கு

வருகை தாருங்கள்: COVIDVaccineWA.org அல்லது DOH.WA.GOV/Coronavirus

அழைக்கவும்: 1-800-525-0127, பின்னர் # ஐ அழுத்தவும். மொழி உதவி கிடைக்கிறது.

Vaccinate WA

CovidVaccineWA.org

## பக்க விளைவுகள் என்ன?

உங்களுக்கு பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால் பக்க விளைவுகள் ஒன்று அல்லது இரண்டு நாட்களுக்கு மட்டுமே நீடிக்கும்.

**உங்கள் உடல் முழுவதும்:**



- சோர்வு
- தலைவலி
- தசை வலி
- குளிர்
- காய்ச்சல்
- குமட்டல்

**உங்கள் கையில் தடுப்பூசி செலுத்தப்பட்ட இடத்தில்:**



- வலி
- சிவந்து போதல்
- வீக்கம்

இரண்டு தடுப்பூசிகள் எடுக்கும் சூழ்நிலையில், இரண்டாவது தடுப்பூசிக்கு பிறகு பக்க விளைவுகள் மோசமாக இருக்கலாம்.

உங்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டால் 911 ஐ அழைக்கவும். எந்தவொரு பக்க விளைவுகளையும் பற்றி V-safe இல் பதிவு செய்யலாம்: **vsafe.cdc.gov**.

## ஒரு தடுப்பூசி மற்ற தடுப்பூசிகளை விட சிறந்ததா?

ஒரு டோஸ் Johnson & Johnson (J&J) கோவிட்-19 தடுப்பூசிக்கு பதிலாக mRNA கோவிட்-19 தடுப்பூசியை (Pfizer-BioNTech அல்லது Moderna) ஐ எடுத்துக்கொள்ளுமாறு நாங்கள் பரிந்துரைக்கிறோம்.

நீங்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ள விரும்பினால் J&J தடுப்பூசி இன்னும் கிடைக்கிறது. நீங்கள் மற்றொரு விருப்பத்தேர்வை விரும்பினால், mRNA தடுப்பூசிக்கு மாற்றாக Novavax கிடைக்கிறது. உங்களுக்கான விருப்பத்தேர்வுகளைப் பற்றி ஒரு சுகாதார சேவை வழங்குநரிடம் பேசவும்.



## கோவிட்-19 தடுப்பூசி என்ன செய்கிறது?



COVID-19 தடுப்பூசி, நோய் ஏற்படாமல் தடுக்கும் நோய்க்கெதிரான பாதுகாப்புகளை உருவாக்குவதற்கு உங்கள் உடலுக்கு பயிற்சியளிக்கிறது.

## தடுப்பூசிகள் பாதுகாப்பானவையா?

ஆம். அனைத்து தடுப்பூசிகளும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்குச் செலுத்தி பரிசோதிக்கப்பட்டவை.

பல இன மக்களிடமும் மற்றும் உடல் பருமன், நீரிழிவு நோய், இதய நோய், கல்லீரல் நோய் மற்றும் எச்.ஐ.வி போன்ற நோய்கள் உள்ளவர்களிடமும் பரிசோதித்து தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.





Department of Health பாதுகாப்பு குறைபாடுகள் ஏதும் இல்லை என்பதை உறுதிப்படுத்த பாதுகாப்பு அறிக்கைகளை தவறாமல் சரிபார்க்கிறது.

## நான் ஏன் தடுப்பூசி போட வேண்டும்?

தடுப்பூசி போடுவது பணியின் போது பாதுகாப்பாக இருக்கவும், உங்கள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரை அடிக்கடி சந்திக்கவும் உதவும்.

நீங்கள் தீவிரமாக நோய்வாய்ப்படுவதற்கான, மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கான அல்லது கோவிட்-19 நோயினால் இறப்பதற்கான வாய்ப்பு மிகக் குறைவு.



**DOH 348-804 October 2022 Tamil**

Washington State Department of Health

இந்த ஆவணத்தை வேறொரு வடிவத்தில் கோருவதற்கு, 1-800-525-0127 ஐ அழைக்கவும். காது கேளாதோர் அல்லது கேள் திறன் குறைபாடு உள்ள வாடிக்கையாளர்கள், தயவுசெய்து 711 (Washington Relay) ஐ அழைக்கவும் அல்லது civil.rights@doh.wa.gov என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும்.